## தமிழ்நாடுவேளாண்மைப் பல்கலைக்கழகத்தில்

## 6வது கோவை மலர் கண்காட்சி -2024

தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழகம் மலர்களின் இரகங்களையும், வண்ணங்களையும், அழகினையும் அதன் வணிக முக்கியத்துவத்தையும் உணர்த்தும் வகையில் கோவை மக்களின் பார்வைக்காக இதுவரை 5 முறை மலர் கண்காட்சியினை வெற்றிகரமாக நடத்தி உள்ளது. இத்தகைய பெருமைமிக்க நிகழ்வு 11 ஆண்டுகள் கழித்து வரும் பிப்ரவரி மாதம் 23ம் நாள் முதல் 25வது நாள் வரை 6வது முறையாக நடைபெற இருக்கிறது. கடந்த 2012ல் நடைபெற்ற மலர் கண்காட்சியினை சுமார் 2 இலட்சம் மக்கள் பார்வையிட்டனர். இந்த முறை 3 இலட்சம் மக்கள் பார்வையிடலாம் என எதிர்பார்க்கப்படுகிறது. இந்த மாபெரும் மலர் கண்காட்சியை தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழகம் மற்றும் ரோட்டரி கிளப் கோயம்புத்தூருடன் இணைந்து பள்ளிக் குழந்தைகள், பொதுமக்கள் வேளாண் மற்றும் தோட்டக்கலை சார்ந்த வல்லுனர்கள் மற்றும் தொழில் முனைவோர் கண்களுக்கு மலர் விருந்தளிக்க காத்திருக்கிறது.

மல்லிகை, செண்டுமல்லி, சம்பங்கி, கனகாம்பரம், தாமரை, செவ்வந்தி, ஆஸ்டர், பெட்டூனியா, சால்வியா மற்றும் பேன்சி போன்ற உதிரி மலர்களைக் கொண்டும், ரோஜா, கார்னேசன், ஆர்க்கிட், ஆந்தூரியம், லில்லியம், ஜெர்பெரா, லிஸியான்தஸ், ஹெலிகோனியா, ஜிப்ஸோபில்லா, ஸ்டேடிஸ் மற்றும் சொர்கத்து பறவை போன்ற கொய்மலர்களாலும் அலங்கார வகை பிராசிகா, பேங்க்ஸியா, லூயூகோஸ்பெர்ம் மற்றும் அலங்கார அன்னாசி போன்ற அரியவகை அயல்நாட்டு மலர்களையும் கொண்டு கலைநயத்துடன் பலவேறு உருவ அமைப்புகளாக அலங்கரிக்கப்பட உள்ளன.

### மலர் கண்காட்சியின் முக்கியத்துவம்

இயற்கைவள பாதுகாப்பு, சுற்றுச்சூழல் முக்கியத்துவத்தை பேணல், மலர்களின் முக்கியத்துவம் மற்றும் வணிக மதிப்பு ஆகியவற்றை பள்ளி குழந்தைகள் மற்றும் பொதுமக்களுக்கு எடுத்து செல்வதே இக்கண்காட்சியின் நோக்கமாகும். தோட்டக்கலை மற்றும் வேளாண் வல்லுனர்கள், மலர் வணிகத்தில் தொழில் முனைவோர் மற்றும் மலர் அலங்கார நிபுணர்கள் ஆகியோர் ஒருங்கே கூடி தங்கள் எண்ணங்களையும், திறமைகளையும் கொண்டு இந்த மலர் கண்காட்சியினை சிறப்புற உருவகப்படுத்த இருப்பதால் இந்த மூன்று நாள் மலர் கண்காட்சி கோவை மற்றும் மற்ற மாவட்ட பொதுமக்களுக்கு தங்கள் வேலைப்பளு மற்றும் கவலைகளை மறந்து கொண்டாடும் ஒரு மலர்த்திருவிழாவாக அமையவிருக்கிறது.

### 6வது மலர்க்கண்காட்சியின் மையக்கருத்து

2005, 2006, 2010, 2011 மற்றும் 2012 ஆகிய வருடங்களில் பல்வேறு மையக்கருத்துருவுடன் சிறப்பாக நடந்தேறிய மலர்க்கண்காட்சிகள் மக்களின் மனதில் நல்ல வரவேற்பைப் பெற்றதைத் தொடர்ந்து, வரும் 6வது மலர் கண்காட்சியும் அத்தகைய வண்ணம் அமையும் பொருட்டு **'கனவுகள் மலரட்டும்'** (Let Your Dreamz Blossom) என்ற மையக்கருத்துடன் நடைபெற உள்ளது.

*மலர்க் கண்காட்சியின் சிறப்பம்சங்கள்*

*மலர்களின் சிறப்பை பறை சாற்றும் வகையில் தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழகத்தில் நடைபெற உள்ள மலர்க் கண்காட்சியின் சிறப்பம்சங்கள் பின்வருமாறு:*

- *நமது நாட்டில் உற்பத்தி செய்யும் கொய்மலர் மற்றும் உதிரி மலர்களைக் கொண்டு பல்வேறு அலங்காரங்கள் மக்களுக்கு '**கனவுகள் மலரட்டும்**' என்ற மையக்கருத்துடன் வைக்கப்பட உள்ளன.*
- *அரியவகை வெளிநாட்டு மலர்களான பேங்க்ஸியா, லூயூகோஸ்பெர்மம், ஆர்னமென்டல் பிராசிகா, ஹைபெரிக்கம், பியோனி, கொச்சியா, புரோடியா, லியாட்ரிஸ் மற்றும் அழகு பைன்ஆப்பிள்களைக் கொண்டு அலங்கார அமைப்புகள் அமைக்கப்படஉள்ளது.*
- *உலர் மலர்களைக் கொண்டு உருவாக்கப்பட்ட பல்வேறு உலர் மலர் அலங்கார கைவினைப் பொருட்களின் அலங்காரஅமைப்புகள் மற்றும் 'இக்கிபானா' என்ற ஜப்பானிய வகை அலங்கார அமைப்புகள் பல்வேறு வடிவங்களுடன் அலங்கரிக்கப்பட உள்ளன.*
- *உள்ளூரில் உற்பத்தியாகும் பல்வேறு காய்கறிகளைக் கொண்டு காய்கறி உருவ அமைப்புகள் அமைக்கப்பட உள்ளன.*
- *நூற்றுக்கும் மேற்பட்ட பல்வேறு தாவர பழ மற்றும் அலங்கார மரங்களைக் கொண்டு வடிவமைக்கப்பட்ட போன்சாய் குட்டை செடி அலங்காரங்கள் அமைக்கப்பட உள்ளன.*

*மக்கள் சேவையில் உள்ள கோவை ரோட்டரி கிளப்புடன், இந்த மலர்க் கண்காட்சியை மேலும் சிறப்புற செய்யும் வயில் உயர் ரக ஜாதிநாய்களின் அணிவகுப்பு, புகழ் வாய்ந்த பழங்கால வாகனங்களின் அணிவகுப்பு, புகைப்பட மற்றும் ஓவியக்கண்காட்சி, இசை நிகழ்ச்சி மற்றும் குழந்தைகளுக்கான சிறப்பு விளையாட்டு திடல் போன்ற அம்சங்களை மலர்க் கண்காட்சி நடைபெறும் நாட்களில் ஏற்பாடு செய்யப்பட்டுள்ளன.*

*மேலும் அலங்கார மலர் கலையை ஊக்குவிக்கும் பொருட்டு பொதுமக்களுக்கு சிறந்த அலங்கார மலர் கலையை காட்சிப்படுத்தும் போட்டியும் நடத்த திட்டமிட்டுள்ளோம்.*

*பொருட்காட்சி அரங்குகள்*

*தோட்டக்கலை சார்பு நிறுவனங்கள், வேளாண்மை சார்ந்த தொழில் நிறுவன்ங்கள், வங்கிகள், கல்வி நிறுவனங்கள், உணவகங்கள் மற்றும் சித்த மருத்துவ துறைகள் ஆகியவை இக்கண்காட்சியில் கலந்து கொண்டு பொருட்காட்சி அரங்குகள் அமைக்கப்படவுள்ளனர். மேலும் நூற்றுக்கும் மேற்பட்ட வணிக அரங்குகள் இவ்விழாவில் அமைக்கப்பட உள்ளன.*